கீழ்க்காணும் அறிகுறிகள் இருந்தால், மருத்துவரை உடனே அழையுங்கள்:

- துரித, முறையற்ற இருதயத்துடிப்பு
- உடல் நடுக்கம்
- பிரமை பிடித்தல்
- மூச்சுத் திணறல் அல்லது மூச்சு விடுவதில் சிரமம்

## நான் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் யாவை?

இந்த மருந்தை எடுப்பதற்கு முன்பாக,

- எந்த மருந்தாவது உங்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்துமா என்பதை உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- நீங்கள் கர்ப்பவதியா என்பதை உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- நீங்கள் வேறு மருந்து உட்கொண்டு வந்தால் அதையும் அவர்களிடம் தெரிவியுங்கள்.
- தற்சமயம், அல்லது இதற்கு முன்பு, மருத்துவப் பிரச்னை ஏதும் உங்களுக்கு இருந்ததா என்பதை மருத்துவரிடம் தெரிவியுங்கள். குறிப்பாக, ஆஸ்துமா மற்றும் கண்களில் மிகை அழுத்தம் (glaucoma).
- இந்த மருந்து உட்கொள்ளும்போது மதுபானம் அருந்தாதீர்கள். மதுவின் பாதிப்பை இந்த மருந்து அதிகப்படுத்தும்.
- இந்த மருந்து சிலருக்கு அதிக துக்கத்தையும் மந்த நிலையையும் உண்டாக்கும். உங்களுக்கு எப்படி என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். விழிப்பு நிலையில் இல்லாதபோது வாகனம் ஓட்டுதல், இயந்திரம் இயக்குதல் போன்ற வேலைகளைச் செய்வது ஆபத்தில் முடியலாம்.

## மருந்தை நான் எப்படி வைத்திருக்க வேண்டும்?

மருந்தை காற்று புகாத டப்பாவில் வைத்திருங்கள். மருந்தின்மீது வெப்பமோ சூரிய ஒளியோ படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Ministry of Health

National Healthcare Group

SingHealth



# நோயாளி தகவல் கையேடு



# குமட்டலைப் போக்கும் மருந்துகள்

# Anti-nausea Medicine

T23R0

## உங்கள் மருந்து பற்றிய தகவல்

இம்மருந்து குமட்டல், வாந்தி மற்றும் பயணத்தின்போது ஏற்படும் தலைச்சுற்றல் ஆகியவற்றைத் தடுக்கவும், அவற்றுக்கு சிகிச்சை அளிக்கவும் பயன்படுகிறது.

சில வேளைகளில் இந்த மருந்தை வேறு பிரச்னைகளுக்கும் பயன்படுத்தலாம்; மேல் விவரங்களுக்கு உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரைக் கேளுங்கள்.

| மருந்து | செயல் |
|---|---|
| புரோமதசைன் (Promethazine)<br>டைமென்ஹைட்ரினேட் (Dimenhydrinate)<br>சைக்ளிசைன் (Cyclizine)<br>சின்னரிசைன் (Cinnarizine) | இந்த மருந்து மூளையின் சமநிலைத் தன்மையை ஒழுங்குபடுத்துகிறது. எனவே பயண நோயைத் தடுக்கவும் அதற்கு சிகிச்சை அளிக்கவும் உதவுகிறது. |

## மருந்தை நான் எப்படி உட்கொள்ள வேண்டும்?

பயணமாவதற்கு 1-2 மணி முன்பாக, அல்லது குறைந்தது 30 நிமிடங்களுக்கு முன்பாக, இந்த மருந்தை உட்கொள்ளுங்கள். மருந்தை அதற்குப் பிறகும் எடுக்கத் தேவைப்பட்டால், 4-6 மணிக்கு ஒரு முறை எடுக்கலாம். மருந்தைச் சரியான முறையில் எடுக்கத் தெரியாவிட்டால் மருந்தாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

இந்த மருந்தை உணவுடன் உட்கொள்ளலாம்.



நோயாளி தகவல் கையேடு | **குமட்டலைப் போக்கும் மருந்துகள்**

## மருந்து உட்கொள்ள நான் மறந்துவிட்டால் என்ன செய்வது?

வழக்கமாக மருந்து உட்கொண்டு வரும்போது, ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்து ஏற்படுத்தக்கூடிய பக்க- விளைவுகள் யாவை?

பக்க- விளைவுகள் பொதுவாக இருக்காது என்றாலும், அவை ஏற்படக்கூடிய சாத்தியமும் உள்ளது. பக்க- விளைவுகள் முதலில் இருந்தாலும் மருந்துக்கு உடல் பழகிக் கொண்டுவரும்போது அவை பொதுவாக மறைந்துவிடும். எனினும், கீழ்க்காணும் பக்க-விளைவுகள் நீடித்தாலோ அல்லது தொந்தரவு கொடுத்தாலோ, மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

| மருந்து | பக்க-விளைவுகள் |
|---|---|
| புரோமதசைன் (Promethazine)<br>டைமென்ஹைட்ரினேட் (Dimenhydrinate)<br>சைக்ளிசைன் (Cyclizine)<br>சின்னரிசைன் (Cinnarizine) | மந்தம்<br>தலைச்சுற்றல் (அரிது)<br>வாய், மூக்கு அல்லது தொண்டை வரண்டு போதல் |

இம்மருந்துகளை எடுக்கும்போது, வழக்கத்திற்கு மாறான பக்க-விளைவுகள் ஏதும் ஏற்பட்டால், மருத்துவரை உடனே பாருங்கள்.